## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.13/2013

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 14.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெங்கராஜன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | வேம்புகண்ணன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பி.சா. 3 முன்னிலை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். கடந்த 27.02.1996-ல் ஏற்பட்டதாக சொல்லப்படும் ஆவணம் குறித்து எனக்கு எதிராக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.132/2018 வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை மற்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை ஆகியவற்றில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவணத்தை பதிவு செய்ய தாக்கல் செய்வதற்கு முன்னதாக வாதி தங்கமணி கிரைய சாசனம் எழுதி கொடுத்ததை பதிவு செய்ய மறுத்து வருவதாகவும், கிரைய சாசனம் பதிவு செய்வதற்கு வரும்படி அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நேரிடையாக அவரிடம் கேட்டுள்ளேன்.

வாதி எனக்கோ, எனது இரண்டு சகோதரர்கள் மற்றும் எனது மனைவிக்கு ஆவணம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்களாகவே கிரைய ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றாலும், நாங்கள் சொல்வது வாதி

தங்கமணி கிரைய சாசனம் எழுதிக்கொடுத்திருந்தால் பதிவு செய்தவற்கு அவரை அழைத்து இருப்போம் என்றால் சரியல்ல. வாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கை லெட்டர் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 27.02.1996 ஆகும். எந்த ஆவணத்தை அனுசரித்து மேற்கண்ட் கை லெட்டர் எழுதப்பட்டது என்றால் வாதி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்து விட்டு கிரைய சாசனம் செய்து தருவதற்கு கால தாமதம் செய்து வந்ததால் கிராமத்தில் எனது சித்தப்பா மற்றும் மாமா ஆகியோர்கள் முன்னிலையில் வாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டது.

பி.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஆவணம் வாதியால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி தங்கமணியின் பெயரை குறித்து கடந்த 01.03.1995 ல் S.R.V. தங்கமணி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் அவர் சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் S.R.V. தங்கமணி என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் கடந்த 09.02.1996-ல் எனது தகப்பனார் வேம்புக்கண்ணன் தஞ்சிராயர் என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றை தொடங்கினார் என்றாலும், ஆவண எண்.27/1996 புத்தகம் எண் 4 ஆக மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் S.R.V. தங்கமணி என்று தான் கையொப்பம் செய்துள்ளார் என்பதால் 27.02.1996 ல் வாதி தங்கமணி எழுதி கொடுத்தாக சொல்லப்படும் கை லெட்டரிலுள்ள கையொப்பம் அவருடைய தல்ல என்றாலும், அவரால் அந்த ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

எனது சகோதரரான வாதி வாங்கிய பெரிய இடத்தை நாங்கள் எழுதி வாங்கவேண்டும் என்பதற்காக மேற்கண்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் கிரைய ஆவணங்கள் எங்களால் மோசடியாக தயார் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி தங்கமணி பிரவேட் லிலிடெட் கம்பெனிக்கு அவரது மனைவி தான் பங்குதாரர் என்றாலும், அதில் வாதிக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தங்கமணி பிரவேட்

லிமிடெட் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி அதில் வாதி நஷ்டம் அடைந்ததாக சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல.

தங்கமணி பிரவேட் லிமிடெட் என்பது பெயர் மட்டும் தான் தங்கமணி என்றாலும், அந்த கட்டிடம் அவரது மனைவிக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல. என்னால் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. வாதிக்கு நஷ்டம் ஏற்பட்டதால் எங்களிடம் வந்து பணம் கேட்டதாக சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. தங்கமணி வாங்கியுள்ள இடத்தின் மொத்த விஸ்தீரணம் 39050 சதுரடியாகும். பூமியில் எவ்வாறு உள்ளது என்றால் குளமாக உள்ளது.

39050 சதுரடி இடத்தில் வாதியின் கல்யாண மண்டபம் உள்ள இடத்திற்கு வடக்கு பக்கத்தில் இடம் இருந்தது என்றால் சரிதான். கல்யாண மண்டபம் சுமார் 10 ஆயிரம் சதுரடி இருக்கும். மண்டபத்திற்கு தெற்கு மற்றும் வடக்கு பக்கத்தில் எவ்வளவு சதுரடி நிலம் இருந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி அவரது மனைவிக்கு செய்து கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் 17220 சதுரடியில் தான் மண்டபம் கட்டப்பட்டுள்ளது என்றாலும் அதுக்குறித்து எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதியின் பெயரில் மண்டபம் உள்ளது எனக்கு தெரியும். அது எவ்வளவு சதுரடியில் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வாதி எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் கிரைய உடன்படிக்கையில் 17230 சதுரடி இடத்திற்கு கிரைய உடன்படிக்கை போடப்பட்டது. அதன் நான்கெல்லை என்னவென்றால் தெற்கில் வாதியின் கல்யாண மண்டபம், வடக்கில் வீரா கணேசன், கிழக்கில் தஞ்சாவூர் ரோடு, மேற்கில் மணவாளன் இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வாதி அவரது மனைவி தையல்நாயகிக்கு ஆவணம் எழுதிக்கொடுத்தற்கு பின்னிட்டு பூமியில் 17230 சதுர இருந்தது என்றால் சரியல்ல. மண்டபத்திற்கு வடக்கில் உள்ள இடம் யாரால் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வாதி

தங்கமணி அவரது மனைவிக்கு செய்து கொடுத்த இடத்திற்கு தெற்கில் உள்ள இடத்தை மட்டும் தான் எங்களுக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி மற்றும் அவரது மனைவி இருவருக்கும் சேர்ந்துள்ள இடத்திற்க தெற்கிலுள்ள இடத்தை எங்களுக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தாக சொல்கிறேன்.

எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.6 ஆவணத்தில் வாதி எங்களுக்கு கொடுக்க வேண்டிய தொகை பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்திற்க முன்னதாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தாகவோ, அந்த உடன்படிக்கை படி வாதி நடந்துக் கொள்ளவில்லை என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ. 17,23,000 கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது. கடந்த 1995 ற்கு முன்னதாக நான் பணம் கொடுத்தேன். கிரைய உடன்படிக்கை ஏற்படுத்ததாக சொல்லபடும் தேதியில் நான் பணம் கொடுக்கவில்லை. அதற்கு முன்பே கொடுத்துவிட்டேன்.

மேற்கண்டதொகைகள் என்னுடைய வேலை மற்றும் விவசாயத்திலிருந்து கிடைத்த வருமானம் ஆகும். மேற்கண்ட தொகைகளுக்கு நான் வருமான வரி செலுத்தவேண்டும் என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் வருமான வரி செலுத்தியுள்ளேன். மேற்கண்ட தொகைகள் வீட்டிலுள்ள நகைகளை அடகு வைத்து மற்றும் விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பணம் வங்கியிலுள்ள பணம் ஆகியவற்றை சேர்த்து தான் ரூ. 17,23,000 கொடுத்ததாக சொல்கிறேன். என்னுடைய பணிக்கால ஓய்வு வருமானம் 7 லட்சம் ஆகும். விவசாயத்திலிருந்து வருடத்திற்கு 3 லட்சம் வரும். அப்போது நெல் மூட்டை 84 ரூ விற்றது. அப்போது எனக்கு 3 வேலி நிலம் இருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும் ரூ.17,23,000 தொகை என்னால் வாதிக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

நான் உண்மையில் எனக்கும் வாதிக்கும் இடையில் கிரைய உடன்படிக்கை ஏற்பட்டிருந்தால் சரியாக நான்கெல்லை குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும், அவரது

இடத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி அவரது மனைவிக்கு ஆவணம் ஏற்படுத்திகொடுத்தற்கு பின்னிட்டு பூமியில் நான் சொல்லும் அளவிற்கு பணம் இல்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.6 ஆவணம் வழக்கு தாக்கல் செய்தற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டது என்பதால் தான் இந்த வழக்கிலும் அல்லது என்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலும் இந்த ஆவணத்தை குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

கடந்த 27.02.1996 ல் ஏற்படுத்தப்பட்ட கை லெட்டரில் கடந்த 01.04.1996 தேதியிட்ட பத்திரம் எழுதவேண்டும். கடந்த 28.02.1996 தேதியில் கையெழுத்து போட முடியும் என்றால் தவறானதாகும். அவர் 01.04.1996 தேதி குறிப்பிட்டு பத்திரம் எழுதவேண்டும் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி முரண்பாடுகள் இருப்பதை பார்க்கும்போது பி.சா.ஆ.6 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ. 6 ஆவணத்தில் உள்ள வாசகங்களுக்கும் பி.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள வாசகங்களுக்கு முரண்பாடாக உள்ளது என்பதால் இந்த ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி. சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள விவரத்திற்கு கிரைய சாசனம் பதிவு செய்துள்ள ஆவணத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் 5 நபர்கள் சேர்ந்து மேற்கண்ட கிரைய சாசனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பி.சா.ஆ. 2 ஆவணத்தில் கோவிந்தராஜன் வாதி தங்கமணியிடம் ரூ.3,89,400/- கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மகன் தனியாக பணம் கொடுக்கவில்லை. நான் தான் மொத்தமாக கொடுத்தேன்.

கோவிந்தராஜனுக்கு பத்திரம் எழுதுவதற்குண்டான விவரங்களை வாதி தான் சொன்னார். பி.சா.ஆ.2 வாதி கோவிந்தராஜன் என்பவரிடமிருந்து பணம் வாங்கவில்லை என்றும், ஏற்கனவே கோவிந்தராஜனின் தந்தையாரரான என்னிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதாக சொல்லப்படவில்லை என்றால்

சரிதான். பி.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையில் தங்களுக்கோ, தங்களின் அனுமதி பெற்ற நபர்களிடமோ கிரைய சாசனம் ஏற்படுத்திக்கொடுப்பதாகவோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

சந்தை விலைக்கு வாதியிடம் பணம் கொடுத்தாக ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அப்போதைய சந்தை விலை ரூ50 ஆக இருந்தது. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், அப்போது சந்தை விலை அதிகமாக இருந்தது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சந்தை விலை ரூ50/- ஆக இருந்து இருந்தால் நான் சந்தை விலை குறித்து சொல்லியிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. அந்த இடம் குளமாக இருந்ததால் சந்தை விலை ரூ.50 இருந்தது. மேற்கண்ட விவரங்களை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1, பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. முறையாக வாதியிடம் சொத்தை வாங்கவேண்டும் என நான் நினைத்திருந்தால் அவருக்கு முறையாக அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றாலும், நான் திட்டமிட்டு அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக மோசடியாக கிரைய சாசனங்கள் மற்றும் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சார்பதிவாளர் எங்கள் தரப்பில் தாக்கல் செய்த கிரைய ஆவணத்தை பதிவு செய்ய முடியாது என சொன்னார் என்றால் சரிதான். ஏன் பதிவு செய்ய முடியாது என்றால் கிரைய ஆவணம் பதிவு செய்யும் போது அவர் நேரிடையாக வரவேண்டும் என சொன்னார். நான் சொல்வதுபோல் வாதி வராத காரணத்தினால் முடிவுறா ஆவணம் என சொல்லியிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. எங்களிடம் முடிவுறா ஆவணம் என சொல்லி தான் கிரைய சாசனம் பதிவு செய்யாமல் மறுக்கப்பட்டது என்றால் சரியல்ல. விற்பனை செய்தவரின் கையொப்பம் இல்லை என்றும், அவர் வரவில்லை என்றும், மாவட்ட பதிவாளரிடம் சொல்லி பதிவு செய்துக்கொள்ளும்படி சொன்னார். பி.சா.ஆ.2 ஆவணத்தில் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கையொப்பம் தங்கமணியுடையது அல்ல என்றாலும், அதில் விற்பவரின் கையொப்பம் இல்லை என்று சொல்லி திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. கிரைய சாசன ஆவணம் பதிவு

செய்யப்படும்போது விற்பனை செய்யும் நபர் நேரிடையாக வந்து கையொப்பம் செய்யவேண்டும் என்பதாலும், அவர் அன்றையதினம் நேரில் வரவில்லை என்பதாலும் திருப்பி கொடுத்துவிட்டார். சார்பதிவாளர் நான் சொல்வதுபோல் என்னிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றாலும், என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணத்தில் வாதியின் கையொப்பம் ஒவ்வொரு பக்கத்திலும் இல்லை என திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன் பின்பு அந்த ஆவணத்தை நான் வாங்கி சென்று நான் மோசடியாக எனது சகோதரராக வாதியின் கையொப்பத்தை போட்டு பதிவுக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எத்தனை பத்திரம் சார்பதிவாளரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டது என்றால் 4 பத்திரங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் 4 தாள்கள் இருந்தது. அன்றைய தேதியில் 12 சதவீதம் முத்திரை கட்டினோம். ஏன் 12 சதவீதத்திற்கு முத்திரை தாள்கள் வாங்கவில்லை மீததொகையை நேரில் செலுத்தினோம். 12 சதவீதத்திற்கு முத்திரை தாள் வாங்கினால் ஒவ்வொரு பக்கத்திலும் வாதியின் கையொப்பத்தை மோசடியாக செய்யமுடியாது என்பதால் 4 தாள்கள் மட்டும் வாங்கி அதில் வாதியின் கையொப்பத்தை மோசடியாக போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 4 முத்திரைதாள் கொண்ட கிரைய சாசனம் என சொல்லியுள்ள நிலையில் 3 தாள்கள் மட்டும் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. (பிரதிவாதி தரப்பில் இந்த ஆவணம் அவரால் குறியீடு செய்யப்படவில்லை என்பதால் அதுக்குறித்து சாட்சியிடம் கேள்வி எழுப்ப முடியாது என சொல்லி ஆட்சேபணை தெரிவித்தார்.)

எனது பெயரிலும், எனது மனைவி, மகன் பெயரிலுள்ள ஆவணங்கள் அனைத்தையும் ஒரே நாளில் சார்பதிவாளர் அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தினோம் என்றால் சரிதான். அன்றைய தேதியில் பி.சா.அ.6 ஆவணத்தில் யார் யார் சாட்சிய கையொப்பம் செய்தார் என்றால் ஆர். சீனிவாசன், ஆர். ராமச்சந்திரன், ஜெயராமன், விவேகானந்தம், வி. செல்வம், எஸ் கிருஷ்ணமூர்த்தி, பி.சண்முகானந்த வடிவேல் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். அவர்கள் அனைவரும் என்னிடம் வேலை பார்த்த நபர்கள் என்றால் சரியல்ல. எனக்கும்

வாதிக்கும் சித்தப்பா மற்றும் மாமாக்கள் ஆவார்கள். பி.சா.ஆ.6 ஆவணம் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சி கையொப்பம் செய்த நபர்களை சாட்சியாக விசாரிக்கப்போகிறோமா என்றால் அவர்களை சாட்சியாக விசாரிக்க நான் விரும்பவில்லை. ஏன்னென்றால் பி.சா.ஆ.6 ஆவணம் என்னால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் அவர்களை சாட்சியாக அழைத்து விசாரித்தால் எங்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க மாட்டார்கள் என்றால் சாட்சியாக விசாரிக்க விருப்பம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த ஆவணங்கள் அனைத்தும் மோசடியாக தயாரிக்கப்பட்டதென்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

ஒம்./. A. சீதாலெட்சுமி,

District Munsif

Mannargudi.